


தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 60



# இலங்கைக்கு 65,000 மெட்ரிக் தொன் யூரியா

*இலங்கைக்கு உடனடியாக 65,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தை வழங்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்திய கடன் திட்டத்தின் கீழ் இந்த யூரியா தொகை வழங்கப்படவுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.*

# நிதி உதவிக்காக பிரதமர் விசேட கலந்துரையாடல்

நிதி உதவிக்காக வெளிநாட்டு மன்றம் ஒன்றை அமைப்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை. இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே. ஜப்பானியத் தூதுவர். அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் மற்றும் சீனத் தூதுவர் ஆகியோருடன் பிரதமர் பூர்வாங்கச் சந்திப்பொன்றை நடத்தினார். இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின் போது. இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக டோக்கியோ செல்ல தயார் என ஜப்பானிய தூதுவர் தெரிவித்துள்ளார். அமெரிக்கத் தூதுவருடனான கலந்துரையாடலின் போது. அமெரிக்க திறைசேரித் திணைக்களக் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பிலும் பிரதமர் விக்கிரமசிங்க கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். அரசியலமைப்பின் 19வது திருத்தம் மற்றும் பாராளுமன்றத்தில் கண்காணிப்பு குழுக்களை பலப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக சீன தூதுவர் பிரதமர் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார். இதேவேளை. பிரித்தானியா செல்வதற்கு முன்னர். பிரித்தானிய உயர்ஸ்தானிகருடன் பிரதமர் தொலைபேசியில் உரையாடியுள்ளார். இலங்கையின் நிலைமை குறித்து பிரித்தானிய அரசாங்கத்திற்கு விளக்கமளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை. முன்னாள் அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர. சுசில் பிரேமஜயந்த மற்றும் எரிசக்தி அமைச்சின் மற்றும் பெற்றோலிய வள அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் அவசர கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அதில் சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்..

நாட்டில் தற்போது நிலவும் எரிசக்தி நெருக்கடி மற்றும் மக்களின் சுமையை குறைக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. இதேவேளை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்குவது மற்றும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஆராய ஐந்து பேர் கொண்ட விசேட குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

இதன்படி. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் பொருட்களை வழங்குவது குறித்து ஆராய்வதற்காக வஜிர அபேவர்தன மற்றும் பாலித ரங்கே பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். பெற்றோலிய விநியோகத்தை கையாள்வதற்காக சாகல ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். போதைப்பொருள் விநியோகம் தொடர்பில் ஆராய்வதற்காக ருவான் விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். உர விநியோகம் தொடர்பில் ஆராய அகில விராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அரிசி விலை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம்

*அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் தனி உரிமையாளராக இருந்தால் 100,000 ரூபா முதல் 500,000 ரூபா வரையில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.*

*அத்துடன் தனியார் நிறுவனம் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் அவர்களுக்கு 500,000 ரூபா முதல் அதிகபட்சமாக 5 மில்லியன் ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. மேலும், அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.*



# புகையிரத பயணிகளுக்கான அறிவிப்பு

*இன்று (14) முதல் பல நீண்ட தூர புகையிரதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தீர்மானித்துள்ளது.*

*ஊரடங்குச் சட்டம் காரணமாக பல புகையிரதங்கள் சேவைகள் ஈடுபடுத்த முடியாமல் போனதான புகையிரத பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.*

*எவ்வாறாயினும், ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் புகையிரத சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என தம்மிக்க ஜயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார்.*



# ஆழ்ந்த இரங்கல்!

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் ஜனாதிபதி ஷேக் கலீஃபா பின் சயீத் அல் நஹ்யான் (73) நேற்று காலமானார். கடந்த 2004 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி முதல் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் ஜனாதிபதியாகவும், அபுதாபியின் ஆட்சியாளராகவும் இவர் இருந்து வந்தார்.

இவரது மறைவு குறித்து அந்நாட்டின் ஜனாதிபதி விவகாரத்துறை அமைச்சகம் வெளி யிட்டுள்ள அறிக்கையில், "நாட்டு மக்களுக்கும், இஸ்லாமிய தேசத் திற்கும், உலக மக்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் மறைவுக்காக 40 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும். கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும். அமைச்சகங்கள், துறைகள், மத்திய அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது" என்று அதில் குறிப்பிட்டிருந்தது.

1971 ஆம் ஆண்டு முதல் ஷேக் கலீஃபாவின் தந்தை ஷேக் சயீத் பின் சுல்தான் அல் நஹ்யான் அரபு நாட்டின் முதல் ஜனாதிபதியாக இருந்து வந்தார். இவரது மறைவுக்குப் பிறகு ஷேக் கலீஃபா இரண்டாவது ஜனாதிபதியாக தேர் ந்தெடுக்கப்பட்டார். 1948 ஆம் ஆண்டில் பிறந்த ஷேக் கலீஃபா ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இரண்டாவது ஜனாதிபதியாகவும், அபுதாபி அரசாங்கத்தின் ஆட்சியாளராகவும் இருந்தார். இவரது ஆட்சியின் கீழ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஒரு விரைவான வளர்ச்சியைக் கண்டது. இது மக்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்தமை குறிப்பிடத்தக்கது.



# பிரதமருக்கு ஆதரவளிப்பதாக மொட்டு கட்சி தெரிவிப்பு

கட்சியின் சுதந்திர உரிமையைப் பாதுகாப்பதுடன், பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் என கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.




மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதும், குறிப்பாக மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் இருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகள் இருவரை அழைப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. கடந்த 9 ஆம் திகதி காலி முகத்திடலில் இடம்பெற்ற கலவரத்தில் சட்டத்தை நிலைநாட்டத் தவறியமை தொடர்பில் ஆராய்வதற்காக மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று (13) ஆணைக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தார்.

தொடர் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கமளித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. காலி முகத்திடலில் இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் இருவரை அழைத்து வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




# கடலில் காணாமல் போன மூவரில் 3வது நபரின் சடலம் மீட்பு

கடந்த 10.05.2022 அன்று முல்லைத்தீவு செம்மலை கடலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 இளைஞர்கள் காணாமல் போயிருந்தனர். முல்லைத்தீவு செம்மலை கடலில் நீராட சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 சகோதரர்கள் கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தனர். அளம்பில் கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள் குழு ஒன்று செம்மலை கடலில் நீராடுவதற்காக வருகைதந்த நிலையில் கடல் பந்து விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 சகோதரர்களில் ஒருவர் பந்து எடுக்க சென்ற நிலையில் அலையில் இழுத்துசெல்லப்பட்ட நிலையில் அவரை காப்பாற்றும் முயற்சியில் ஏனைய இரு சகோதர்களும் ஈடுபட்டுள்ளபோது அவர்களும் அலையில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தனர். அளம்பிலை சேர்ந்த பத்மநாதன் விஸ்வநாதன் (29) பத்மநாதன் விஜித் (26) பத்மநாதன் விழித்திரன் (22) ஆகிய ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்களே அலையில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தனர்.

இந்நிலையில் கிராம மீனவர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்தின் கீழுள்ள மீனவ அமைப்புக்கள் இணைந்து தேடுதல் பணிகளை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் 11.05.2022 அன்று காலை 7.30 மணியளவில் 22 அகவையுடைய விழித்திரன் அவர்களது உடலம் மீட்கப்பட்ட நிலையில் 11.05.2022 அன்று நண்பகல் 12.20 மணிக்கு 26 அகவையுடைய விஜித் அவர்களுடைய உடலம் மீட்கப்பட்டது. அதனை தொடர்ந்து மூன்றாவது நபரை தேடும் பணிகள் தீவிரமாக இடம்பெற்ற போதும் அவரது உடலம் கிடைக்காத நிலையில் நேற்று 13.05.2022 உடலம் மீட்கப்பட்ட இருவரது உடல்கள் மற்றும் மூத்த சகோதரனும் புகைப்படம் தாங்கியவாறு இறுதிக் கிரியைகள் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் மூத்த சகோதரரான விஸ்வநாதன் அவர்களுடைய உடலம் குறித்த பகுதியில் உள்ள கற்பாறையில் சிக்குண்டு இருந்ததை இன்று (14) மீனவர்கள் கண்ட நிலையில் உடலம் மீனவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. - அத தெரண

